# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.11/2022

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சாந்தி (PW –2) | வயது | : | 57 /2025 |
| க/த பெயர் | : | திரு. ராஜேந்திரன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | திருமக்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு என்ன பரிகாரம் வேண்டி வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதை பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பாதை யாரிடமிருந்து வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சின்னப்பிள்ளை என்பவரிடமிருந்து பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சின்னப்பிள்ளை இந்த வழக்கில் தரப்பினராக இருக்கிறாரா என்றால் ஆமாம்.

2) தார் சாலை யாருக்கு சொந்தமானது என்றால் அரசு புறம்போக்கு. பாதையானது அரசு புறம்போக்கு என்பதற்கான ஆவணங்களை வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மலர்கொடி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது உறவினர். இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு எதுவும் தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 15:52:38 +0530

District Munsif
Mannargudi.